REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 25 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 88 இல. 280 | November 25, Wednesday, 2020 | 24 பக்கங்கள் | 30/-

மைத்திரியிடம்

## ஆறு மணிநேரம் வாக்குமூலம்



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஏழு சந்தர்ப்பங்கள் ஆணைக்குழுவில் ஆஜராகி சாட்சியமளித்துள்ள நிலையில் நேற்று மீண்டும் ஆணைக்குழுவில் ஆஜராகி

06

நாட்டின் இன்றைய நெருக்கடியை வெற்றி கொள்ள குழுவாக இணைவோம்

# கட்சி பேதங்களை மறந்து ஒன்றுபடுமாறு அனைத்து பிரஜைகளுக்கும் அரசு அழைப்பு





கொவிட்19 இரண்டாம் அலையால் நாடு பாரிய நெருக்கடியிலுள்ள சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக செயற்படாது ஒரு குழுவாக அனைவரும் இணைந்து செயற்படுவது மிகவும் முக்கியமாகும். அரசியல், கட்சி, கருத்து பேதங்களுக்கு அப்பால் சவால்களை வெற்றிக்கொள்ள நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் அழைப்பு விடுக்கிறோம். எம்மிடம் குறைப்பாடுகள் இருக்கலாம். குறைப்பாடுகளை நிவர்த்தி செய்து ஒன்றாக இணைந்து பயணிப்போமென வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

முழு உலகமும் கொவிட்19 நெருக்கடியிலிருந்து மீண்டெழுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள தருணத்தில் நாமும்



புலிகள் இயக்கம் எமது நாட்டில் தடைசெய்ய

## நல்லாட்சியில் மாவீரர் நின ரணில் TNAக்கு வழங்கிய ந

அதுவொரு படுமுட்டாள்தனமானது என்கிறார் தி

எமது அரசில் ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது

எமது நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாகும். எனவே, இங்கு அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை வெளிநாடுகள் தடை செய்திருந்தாலும் அங்கு வாழும் தமிழர்கள் மாவீரர் நாளை பகிரங்கமாக நினைவுகூருகின்றார்கள் என்பதற்காக இங்கு நாம் அனுமதி வழங்க முடியாது. இங்கு மாவீரர் நாள் நிகழ்வை நடத்த கடந்த நல்லாட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தமை படுமுட்டாள்தனமாகும் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

அது ஆட்சியில் இருக்கும் தம்மைக் காப்பாற்றி வந்தமைக்காகத் தமிழ்த்

06



ழ். நீதிமன்றம்

ணை இரத்து

ன்றம் உத்தரவு



பக்ஷ ழைப் ன்றம் ீரராஜ்

06

## அரச சேவை ஆணைக்குழுவின் நியமன அதிகாரம் ஜனாதிபதிக்கே

சபையில் பேச முடியாது என சபாநாயகர் அறிவிப்பு

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



அரச சேவை ஆணைக்குழுவின் நியமனங்கள் தொடர்பான அதிகாரங்கள் ஜனாதிபதிக்கே உள்ளன. அதனை பற்றி சபையில் கதைக்க முடியாதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

06

## புத்தளத்தில் அரிய வகை சருகு மான் கண்டுபிடிப்பு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய பிரதேச செயலகத்துக்குட்பட்ட தப்போவ பகுதியில் அரியவகை சந்தனம் நிறம் கொண்ட சருகுமான் ஒன்று அப்பகுதி மக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் வன ஜீவராசிகள் பிராந்திய அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இது தொடர்பில் புத்தளம் வன ஜீவராசிகள் பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விஜயம் செய்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த சருகு மானை மீட்டு வனஜீவராசிகள் பிராந்திய அலுவலகத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

## பிள்ளையான் பிணையில் விடுதலை

கூடவே ஐவருக்கும் பிணை; டிசம்பர் 08 வழக்கு



**பெரிய போரதீவு, புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், படுகொலை செய்யப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சந்திரகாந்தன் மீதான வழக்கு நேற்று செவ்வாய்கிழமை (24) மட்டக்களப்பு குடியியல் மேன் முறையீட்டு மேல்

06



## கொழும்பு மாவட்ட மக்களுக்கு ரூ. 20,000 வழங்க வேண்டும்

பாராளுமன்றத்தில் சஜித் பிரேமதாச கோரிக்கை

**ஷம்ஸ் பாஹிம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**

தனிமைப்படுத்தல் ஊரடங்கு காரணமாக கொழும்பு மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவர்கள் தொடர்பில் அரசாங்கம் உடனடியான கரிசனை செலுத்த வேண்டுமென்பதுடன், 5,000 ரூபா கொடுப்பனவு போதாது. 20ஆயிரம் ரூபா கொடுப்பனவும் அல்லது அவர்கள் வாழ்வதற்கு மோதுமான கொடுப்பனவை அரசாங்கம் வழங்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வேண்டுகோள் விடுத்தார். பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

06

CTB பஸ் பயணத்தின் போது

## கொரோனா பாதித்தால் இழப்பீடு வழங்க ஏற்பாடு



இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணிப்பவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கொவிட் 19 பாதுகாப்பு நிதியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கு போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது. இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணிக்கும்

06

போலி அமெரிக்க டொலர்களுடன்

## கந்தளாயில் இரண்டு சந்தேக நபர்கள் கைது



திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நூறு டொலர் பெறு

## மாவீரர் தின நிகழ்வுகள் குறித்து முரண்பட்ட வழக்குகள் பதிவு

பொலிஸாரை மீளாய்வு செய்ய சிறிகாந்தா கோரிக்கை

**சுமித்தி தங்கராசா**



மாவீரர் நினைவு தின தடைக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் தொடர்பாக பொலிஸார் மீள் பரிசிலனை செய்ய வேண்டும் என சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

யாழில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்

கொரோனாவால் இறந்தவர்கள் தகனம்;

## இன, மத ரீதியாக பார்த்து தனித்துவம் அளிக்க முடியாது



கொவிட்19 தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்தல் தொடர்பிலான தீர்மானம் அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சிபாரிசுகளுக்கு அமையவே மேற்கொள்ளப்படுகின்றது... யுள்ளது. இது தொடர்பில் தொற்று நோயியல் பிரிவைச் சேர்ந்த விசேட மருத்துவர் சுதத் சமரவீர கருத்து தெரிவித்துள்ளார்.

இதுவரை காலமும் கொவிட்19 தொற்றால்



மாவீரர் நினைவேந்தலை கொண்டாட துடிப்போர் உயிரோட இருக்கிற மாவீரர் களது குடும்பங்களின் அவலத்தையும் கவனத்தில் எடுத்தால் நல்லது தானே......

